# இ எஸ் ஐ சி

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், இந்திய அரசு

**70 ஆண்டுகளாக நாட்டிற்கு சேவை செய்வதில் பெருமை அடைகிறோம்**




**கோவை சார் மண்டல இ.எஸ்.ஐ மையங்கள்**

- கோவை, திருப்பூர், நீலகிரி, ஈரோடு மாவட்டங்கள்
- 18 கிளை அலுவலகங்கள்
- 54 மருந்தகங்கள்
- இ.எஸ்.ஐ மருத்துவமனை, கோவை மற்றும் 34 தனியார் இணைப்பு மருத்துவமனைகள்

**இ.எஸ்.ஐ மருத்துவகல்லூரி, மருத்துவமனை,கோவை**

## ESI திட்ட பயன்கள்

- மருத்துவ பயன்
- நோய்கால பயன்
- பேறுகால உதவி பயன்
- ஊன உதவி பயன் (தற்காலிக ஊனம்/ நிரந்தர ஊனம்)
- சார்ந்தோர் உதவி பயன்
- வேலையிழப்பு உதவி பயன்
- தொழிற்கல்வி பயிற்சி
- ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கான மருத்துவ சிகிச்சை
- பிரசவ செலவுகள்
- உடல் திறன் மேம்பாட்டு பயிற்சி
- ஈமச்சடங்கு செலவுகள்
- செயற்கை கை / கால்
- மருத்துவ படிப்பு இடஒதுக்கீடு

### பிரதம மந்திரி ஷ்ரம் யோகி மான் - தன் யோஜனா :-

பிரதம மந்திரி ஷ்ரம் யோகி மான் - தன் யோஜனா, மத்திய அரசின் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான ஓய்வு ஊதிய திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் காப்பீட்டாளர் தனது 60 வயது நிறைவு பெற்ற பின் மாதாந்திர ஓய்வு ஊதியமாக ரூ. 3000 ஐ வாழ்நாள் முழுவதும் பெற்றுக்கொள்ளலாம். காப்பீட்டாளர் இறக்கும் பட்சத்தில் அவரது கணவர்/மனைவி ஓய்வுஊதியத்தில் 50 சதவீதத்தை குடும்ப ஓய்வூதியமாக மாதம்தோறும் பெற்றுக்கொள்ளலாம்.

**தகுதி நிபந்தனைகள்**

- அமைப்பு சாரா தொழிலாளர்கள்.
- வயது 18 முதல் 40 வரை உள்ளவர்கள்.
- மாத வருமானம் ரூ.15000/-க்கு கீழ் உள்ளவர்கள்.
- ESI/EPF/NPS சந்தாதாரர் அல்லாதவர்கள்.
- வருமான வரி செலுத்த தகுதியற்றவர்கள்.

தகுதியான சந்தாதாரர்கள் சுய சான்றளிக்கப்பட்ட ஆதார் எண் மற்றும் வங்கி கணக்கு/ஜன் தன் கணக்கு எண் மூலம் தங்களக்கு அருகில் உள்ள பொது சேவை மையத்தை (Common Services Centers (CSC eGovernance Services India Limited (CSC SPV)) தொடர்பு கொண்டு இத்திட்டத்தின்கீழ் இணைந்து கொள்ளலாம்.

அனைத்து பொது சேவை மையங்களின் பட்டியலை https://labour.gov.in/pm-sym - CSC Locator என்ற இணையதள முகவரியில் அறிந்துகொள்ளலாம்.

### இ.எஸ்.ஐ.சி கோவிட்-19 நிவாரணத் திட்டம் :-

இஎஸ்ஐ சட்டத்தின் கீழ் வரும் காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் கோவிட்-19 நோயால் உயிர் இழந்தால் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு 90 சதவீத சராசரி மாத ஊதியம் நிவாரணமாக மாதம்தோறும் அவர்களின் வங்கி கணக்குக்கு நேரடியாக செலுத்தப்படும்

இந்த திட்டம் 24.03.2020 முதல் 23.03.2022 வரையிலான இரண்டு வருட காலத்திற்கு செல்லுபடியாகும். (அதாவது, இந்த காலத்திற்குள் COVID-19 காரணமாக உயிர் இழந்த காப்பீடு செய்யப்பட்ட தொழிலாளர்களின் தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுவதும் நிவாரணத் தொகையாக வழங்கப்படும்).

**தகுதி நிபந்தனைகள்**

- COVID-19நோயால்இறந்ததொழிலாளி,அந்நோய்கண்டறியப்பட்ட தேதிக்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னதாக ESIC ஆன்லைன் போர்ட்டலில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- இறந்த தொழிலாளி நோய் கண்டறியப்பட்ட தேதி அன்று வேலைவாய்ப்பில் இருந்திருக்க வேண்டும் மற்றும் COVID-19 நோயைக் கண்டறிந்த தேதிக்கு முன் ஒரு வருடத்திற்குள் அவரது பேரில் குறைந்தபட்சம் 35 நாட்களுக்கு ESI பங்களிப்பு இருத்தல் வேண்டும்.

**மேலும் தகவல்களுக்கு 0422 2314430 / 2362329 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்**

ஒருங்கிணைந்த இணையதளம் : www.esic.nic.in

துணை மண்டல அலுவலகம், பஞ்சதீப் பவன், 1897, திருச்சி ரோடு, இராமநாதபுரம், கோயமுத்தூர்–641045.

**ஆரோக்கியமான தொழிலாளர்கள் - வளமான இந்தியா**